# தலைக்கு வந்தது; தலைப்பாகையுடன் போனது

மத்திய கிழக்கில் இஸ்ரேல்–ஈரான் இடையே 12 நாட்கள் நடந்த போர் முடிவுக்கு வந்து, பதட்டம் தணிந்து, இப்போது இயல்புநிலை திரும்பி யுள்ளது. இந்நிலையில், இந்தக் கட்டுரை மோதலின் பொருளாதார தாக்கத்தை மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகிறது.

இந்தியா, அதன் மொத்த கச்சா எண்ணை மற்றும் நீர்ம எரிவாயு தேவைகளில் 80 முதல் 90 சதவீதம் வரை இறக்குமதி செய்கிறது. இந்த இறக்குமதிகளில், கிட்டத்தட்ட 47 சதவீதம் சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து வருகிறது, இதில் பெரும்பகுதி ஹார்முஸ் நீரிணை வழியாக வந்து சேர்கிறது.

இந்தியாவில் தினமும் நுகரப்படும் 55 லட்சம் பேரல் கச்சா எண்ணையில், சராசரியாக 15 லட்சம் பேரல் கச்சா எண்ணை, இந்த நீர்வழியைக் கடந்து வருகின்றன.

இந்தியா, ஈரானுடன் ஒரு சிறப்பு வர்த்தக உறவைக் கொண்டுள்ளது, பணப் பரிவர்த்தனைகள் இந்திய ரூபாயில் நடைபெறுகின்றன. இந்தியாவின் பாசுமதி அரிசி (ஆண்டுக்கு 3 ஆயிரம் கோடி), மசாலாப் பொருட்கள், காய்கறிகள் மற்றும் பழங்களை ஒவ்வொரு ஆண்டும் ஈரான் இறக்குமதி செய்கிறது.

## பணவீக்கம் குறித்த பயம்

ஜூன் 12 அன்று ஈரான் –இஸ்ரேல் மோதல் தொடங்கியதும் கச்சா எண்ணை விலை 5 மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்தன. இந்தியா மட்டுமின்றி உலகளவில் பங்குச்சந்தைகளில் பதட்டம் தொற்றியது. கடந்த ஜூன் 6ல், ஆர்பிஐ கொள்கை விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகள் குறைத்து, 6.5 சதவீதத்தில் இரந்து 6.00 சதவீமதாக நிர்ணயம் செய்தது. தன் நிலைப்பாட்டை 'இணக்கமான' நிலையிலிருந்து 'நடுநிலை' நிலைக்கு மாற்றியிருந்தது. ஆர்பிஐ கவர்னர் நீண்டகால முதலீட்டாளர்கள் உள்நாட்டு உற்பத்தி முதலீடுகளில் கவனம் செலுத்துமாறு வலியுறுத்தினார். அத்துடன், நுகர்வோர் உள்நாட்டு சந்தை பொருட்களை வாங்கும் வகையில் நுகர்வோரை ஊக்குவித்தார். ஆனால், இந்த நடவடிக்கையை மத்திய கிழக்கு நெருக்கடி. எதிர்பாராத வகையில் இந்த நம்பிக்கையை சீர்குலைத்தது.

**தாக்குப்பிடித்தது இந்திய பொருளாதாரம்**

பாரசீக வளைகுடாவுக்கு வெளியே இருந்து கச்சா எண்ணையை வாங்கவும், ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டால் அதன் சொந்த சுத்திகரிக்கப் பட்ட தயாரிப்பு ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தவும் இந்தியா தயாராக இருப்பதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி உறுதியளித்தார்.

நெருக்கடியால் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயங்களை ஒப்புக் கொண்ட, மத்திய அரசின் தலைமை ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன், பொருளாதாரப் புயலைத் தாங்கும் திறன், இந்தியாவுக்கு இருப்பதாக நம்பிக்கை தெரிவித்தார். ஆனால், அதிர்ஷ்டவசமாக, ஜூன் 23ல் போர் நிறுத்தம் அமலானது. முன்னதாக, முந்தைய யுத்த சூழல்களில் கச்சா எண்ணை பேரலுக்கு 100 டாலர் வரை உயர்ந்த நிலையில், இந்தமுறை அப்படி எதுவும் நடக்கவில்லை. இஸ்ரேல் ஈரான் மோதல் நாட்களில் கச்சா எண்ணை ஒரு பேரல் 10 டாலர்கள் வரை உயர்ந்தது.

எரிபொருள் மானியங்கள் இல்லாத சந்தைகளில், ஒரு பேரல் 10 டாலர் உயர்ந்தால், பெட்ரோல் லிட்டருக்கு 7 சதவீதம் (ரூ .6) அதிகரிப்புக்கு வழிவகுக்கும் என்று மதிப்பிடுகிறது. இந்த செலவை நுகர்வோ ருக்கு மாற்றினால், சில்லறை பணவீக்கம் தவிர்க்க முடியாமல் உயரும். இப்போதைக்கு, அரசாங்கம் பெட்ரோலிய பொருட்கள் விலைகளை சீராக வைத்திருக்கிறது, இது நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கிறது.

இப்போது, பெட்ரோல் விலைகள் மாறாமல், சில்லறை பணவீக்கம் 2.82 சதவீமதாக உள்ளது. சாதகமான பருவமழை எதிர்பார்ப்புகளாலும், பொருளாதாரம் வலுவாக உள்ளது. கடந்த 2024–25 நிதியாண்டில் நாட்டின் கச்சா எண்ணை இறக்குமதி 24 கோடியே 24 லட்சம் டன்களாக உயர்ந்தது. 202324ம் நிதியாண்டில் இறக்குமதி 23 கோடியே 27 லட்சம் டன்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது. கச்சா எண்ணை விலைகள் உயர்ந்திருந்தால், அது நாட்டின் அன்னிய செலாவணி கையிருப்பில், கணிசமான அளவு சரிவை ஏற்படுத்தியிருக்கும். இதனால் ரூபாய் மதிப்பும் சரிந்திருக்கும். பொருளாதார வளர்ச்சியும் மந்தமாகியிருக்கும். ஆனால், அதிர்ஷ்டவசமாக, நம் நாட்டுக்கு இப்படியொரு மோசமான சூழல் ஏற்படவில்லை.

**முனைவர் டி.கே. ஜயராமன்.**
முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர்,
ஆசிய வளர்ச்சி வங்கி, மணிலா
tkjayaraman@yahoo,com